**IN THE SUPREME COURT OF INDIA CIVIL ORIGINAL JURISDICTION**

**SUO MOTO WRIT PETITION (CIVIL) NO. 4 OF 2020**

**IN THE MATTER OF :**

**IN RE CONTAGION OF COVID-19 VIRUS IN CHILDREN PROTECTION HOMES**

**O R D E R**

குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்களில் கோவிட்–19 தொற்று தொடர்பான விவகாரம்.

ஆணை

| | |
|---|---|
| 1. This petition has been listed suo moto because of the COVID-19 pandemic which is sweeping the country. There are children who need care and attention and are kept in or children in conflict with law who are kept in various types of homes. There are also children who are kept in foster and kinship care. In these circumstances, it was felt that the interest of these children should be looked into. Interest of these children all of whom fall within the ambit of Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015 should be protected and to prevent the same, the following directions are issued. | 1. நாட்டையே அழிக்கும் கோவிட்–19 எனும் தொற்று நோய் தொடர்பாக இம்மனுவானது தாமாக முன்வந்து விசாரிக்கும் வழக்காக எடுக்கப்பட்டுள்ளது. கவனிப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகளும், சட்டத்திற்கு முரணாக செயல்படும் குழந்தைகளும் பல்வேறு இல்லங்களில் வைக்கப்பட்டுள்ளனர். தற்காலிக பராமரிப்பு வளர்ப்பு முறையிலும் உறவினர் வளர்ப்பு முறையிலும் குழந்தைகள் இருக்கின்றனர். இவ்வாறான சூழலில் இத்தகைய குழந்தைகளின் சிறந்த நலனை பார்க்கவேண்டியுள்ளது. இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ன் கீழ் வரும் அனைத்து குழந்தைகளின் சிறந்த நலனை பாதுகாக்க வேண்டி கீழ்க்காணும் ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| 2. As the pandemic COVID–19 is intensifying in India, it is important that urgent measures need to be taken on priority to prevent the spread of the virus to Child Care Institutions (CCIs).These include children in needof care and protection (CNCP), and children in contact with law (CiCWL) in Observation Homes. These directions also apply to children in foster and kinship care. | 2. கோவிட்–19 எனும் தொற்று நோயானது இந்தியாவில் தீவிரமடைந்துள்ளதால் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் இந்த வைரஸ் பரவாமல் தடுப்பதற்காக முன்னுரிமை அடிப்படையில் உடனடியான நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும். இவற்றில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளும் கூர்நோக்கு இல்லங்களில் உள்ள சட்டத்திற்கு முரணாக செயல்படும் குழந்தைளும் அடங்குவர். இந்த உத்தரவானது வளர்ப்பு பராமரிப்பு முறையிலும் நெருங்கிய உறவினர் வளர்ப்பிலும் உள்ள குழந்தைகளுக்கும் பொருந்தும். |
| 3. These directions have been formulated on the basis of current information and understanding of COVID-19 precautions and response. However, these are also evolving with the progress of the pandemic. State Government and nodal departments are therefore requested to keep the superintendents abreast with all relevant advisories, and circulars along with guidance issued where required. The Juvenile Justice Committees (JJCs) of every High Court shall also ensure that these directions are complied with in letter and spirit. At the same time, it will be ensured that the directions issued by the State in respect of lock-down shall not be violated. However, we hope and expect that the District authorities will give necessary permission to transfer children to their family homes or Juvenile Justice Board (JJB) or any other authority. | 3. இந்த உத்தரவானது கோவிட்–19 தொடர்பான புரிதல்கள், சமீபத்திய தகவல்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் அதற்கான செயல்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இவை இத்தொற்று நோயின் பரவலை ஒட்டி உருவாக்கப்பட்டுள்ளது. மாநில அரசும், சம்பந்தப்பட்ட துறையும் நிறுவன கண்காணிப்பாளர்களுக்கு தேவையான அறிவுரைகளையும், சுற்றறிக்கைகளையும் வழிகாட்டுதல்களையும் அவ்வப்போது வழங்கிட வேண்டும். உயர்நீதி மன்றத்திலிலுள்ள இளைஞர் நீதிக் குழுக்கள் இந்த உத்தரவானது உளப்பூர்வமாக கடைபிடிக்கப்படுகிறதா என்பதனை உறுதி செய்ய வேண்டும். அதே சமயத்தில் மாநில அரசால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு மீறப்படாத வகையில் செயல்படவேண்டும். இருப்பினும் மாவட்ட நிர்வாகம் இக்குழந்தைகளை அவர்களின் குடும்பங்களுக்கோ இளைஞர் நீதிக் குழுமத்திற்கோ அல்லது மற்ற அதிகார அமைப்பிற்கோ மாற்றுவதற்குரிய அனுமதியினை வழங்கும் என எதிர்பார்க்கிறோம் மற்றும் நம்புகிறோம். |

| 4. **MEASURES TO BE TAKEN BY CHILD WELFARE COMMITTEES** | 4. குழந்தை நலக் குழுக்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:– |
|---|---|
| * CWCs are directed to proactively consider steps that are to be taken in the light of COVID - 19, while conducting their inquiries/inspections and also whether a child or children should be kept in the CCI considering the best interest, health and safety concerns. | * விசாரணை/ஆய்வுகள் நடத்தும்போது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கோவிட்–19னை கருத்துதிற்கொண்டு செயல்படவேண்டும் என குழந்தை நலக் குழுக்களுக்கு உத்தரவிடப்படுகிறது. ஒரு குழந்தை அல்லது குழந்தைகளை பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் அவர்களின் சிறந்த நலனை கருத்திற்கொண்டு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் வைக்க வேண்டுமா என்பதை முடிவ செய்யவேண்டும். |
| * Special online sittings or video sessions may be called to consider measures that may be taken to prevent children residing in the Children's Homes, SAAs, and Open Shelters from risk of harm arising out of COVID- 19 | * குழந்தைகள் இல்லங்கள், தத்து நிறுவனங்கள் மற்றும் திறந்த வெளி புகலிடங்களில் உறையும் குழந்தைகளை கோவிட்–19 ஆல் ஏற்படும் இடர்பாடுகளிலிருந்து தடுக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை காணொலிக் காட்சி மூலமாகவோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ சிறப்பு அமர்வுகளாக நடத்தலாம். |
| * Gatekeeping or preventive measures need to be considered and families counselled to ensure that institutionalization is the last resort. Focus should be on prevention of separation when possible. | * தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் நிறுவனப்படுத்துதல் என்பது கடைசி புகலிடம் என்பதனை உறுதி செய்ய, ஆற்றுப்படுத்துதல் வாயிலாக பெற்றோர் / பாதுகாவலர்களுக்கு புரிதலை ஏற்படுத்தவேண்டும். நடவடிக்கைகளை தடுத்தல் மற்றும் தனிமைப் படுத்துதலில் உரிய கவனம் செலுத்த வேண்டும். |

| | |
|---|---|
| * CWCs to monitor cases telephonically for children who have been sent back to their families and coordinate through the District Child Protection Committees and Foster care and Adoption Committees (SFCACs) for children in foster care. | குடும்பங்களுக்கு அனுப்பப்பட்ட குழந்தைகளை தொலைப்பேசி வாயிலாகவே கண்காணிப்பதோடு மாவட்ட குழந்தை பாதுகாப்பு குழுக்களோடு ஒருங்கிணைந்து செயல்படவேண்டும்.மாநில மாற்றுப் பராமரிப்பு மற்றும் தத்துவழங்கல் குழுக்கள் மூலம் மாற்றுப் பராமரிப்பில் உள்ள குழந்தைகளை கண்காணிக்கவேண்டும். |
| * As far as possible, online help desks and support systems for queries to be established at the state level for children and staff in CCIs. | * இயன்றவரையிலும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் பணியாளர்களின் சந்தேகங்களுக்கு பதிலளிக்க மாநில அளவிலான ஒரு உதவி மற்றும் ஆதரவு அமைப்பினை ஆன்லைன் மூலம் ஏற்படுத்த வேண்டும். |
| * It is important to consider that violence, including sexual and gender-based violence may be exacerbated in contexts of anxiety and stress produced by lockdown and fear of the disease, CWCs can monitor regularly through video conferencing, WhatsApp and telephonically to ensure prevention of all forms of violence. | * ஊரடங்கால் ஏற்படும் பதட்டம்/மனஅழுத்தம் காரணமாக நோய் குறித்த பயம் காரணமாக பாலியல் ரீதியான மற்றும் பாலினம் சார்ந்த வன்முறைகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்பதை முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டும். அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் குழந்தைகளை தடுப்பதை உறுதி செய்யும் விதமாக குழந்தை நலக் குழுக்கள் காணொலிக் காட்சி, வாட்ஸ் ஆப் மற்றும் தொலைபேசி வழியாக தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். |

| | |
|---|---|
| **5.MEASURES TO BE TAKEN BY JUVENILE JUSTICE BOARDS AND CHILDREN COURTS** | **5. இளைஞர் நீதிக் குழுமங்களும் குழந்தைகள் நீதிமன்றமும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்:-** |
| Juvenile Justice Boards (JJB) and Children's Courts are directed to proactively consider steps that are to be taken in the light of COVID19, while conducting their inquiries/inspections. Online or video sessions can be organized. | கோவிட்–19 நோயால் ஏற்படும் இடர்பாடுகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு இளைஞர் நீதி குழுமம் மற்றும் குழந்தைகள் நீதிமன்றங்கள் விசாரணை மற்றும் ஆய்வுகளை இணையதளம் அல்லது காணொலி அமர்வுகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| * The Juvenile Justice Boards/Children's Courts may consider measures to prevent children residing in Observation Homes, Special Homes and Places of Safety from risk of harm arising out of COVID- 19. | ▪ கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள குழந்தைளை கோவிட்–19 பாதிப்பிலிருந்து காத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். |
| * In this regard, JJBs and Children's Courts are directed to proactively consider whether a child or children should be kept in the CCI considering the best interest, health and safety concerns. These may include: | ▪ இளைஞர் நீதிக் குழுமமும்/ குழந்தைகள் நீதிமன்றமும் குழந்தைகள் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் அவர்களின் சிறந்த நலனை கருத்தில் கொண்டு குழந்தைகளை குழந்தை பராமரிப்பு நிறுவனத்தில் வைக்கவேண்டுமா என்பதை முடிவு செய்யவேண்டும். |
| - Children alleged to be in conflict with law, residing in Observation Homes, JJB shall consider taking steps to release all children on bail, unless there are clear and valid reasons for the application of the proviso to Section 12, JJ Act, 2015.21 | ▪ இளைஞர் நீதிச் சட்டம்–2015ன் பிரிவு 12ன்படி தெளிவான மற்றும் சரியான காரணங்கள் இருந்தாலன்றி கூர்நோக்கு இல்லங்களில் உள்ள தவறிழைத்ததாக குற்றம் சாட்டப்பட்ட குழந்தைகளை இளைஞர் நீதி குழுமங்கள் பிணையில் விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். |

| | |
|---|---|
| - Video conferencing or online sittings can be held to prevent contact for speedy disposal of cases.<br><br>- Ensure that counselling services are provided for all children in Observation homes.<br><br>- It is important to consider that violence, including sexual violence may be exacerbated in contexts of anxiety and stress produced by lockdown and fear of the disease. JJBs would need to monitor the situation in the Observation Homes on a regular basis. | ▪ வழக்குகளை விரைந்து முடிக்கவும் தொடர்புகளை தவிர்க்கவும் காணொலிக் காட்சி அல்லது ஆன்லைன் மூலம் அமர்வுகளை நடத்தலாம்.<br><br>▪ கூர்நோக்கு இல்லத்திலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் ஆற்றுப்படுத்துதல் சேவை கிடைப்பதை உறுதி செய்யவேண்டும்.<br><br>▪ நோய் பற்றிய பயம் ஊரடங்கால் ஏற்பட்ட பதட்டம், மன அழுத்தம் மற்றும் நோய் குறித்த அச்சம் காரணமாக பாலியல் ரீதியான மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையானது அதிகரிக்கும், அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் குழந்தைகளை தடுப்பதை உறுதி செய்யும் விதமாக இளைஞர் நீதிக் குழுமங்கள் காணொலிக் காட்சி, வாட்ஸ் ஆப் மற்றும் தொலைப்பேசி வழியாக தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். |
| **6. MEASURES TO BE TAKEN BY GOVERNMENTS**<br><br>All states need to recognize that COVID-19 has been declared a pandemic, which warrants urgent attention and action to pre-empt emergency and disaster situation from arising with regard to children in State care. It is directed that all State Governments shall:<br><br>1. Circulate information to all CCIs about how to deal with COVID - 19 immediately, with instructions that awareness about COVID- 19 is spread in a timely and effective manner. | **6. அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்:-** கோவிட்–19 தொற்று நோய் என அறிவிக்கப்பட்டுள்ளதை அனைத்து மாநில அரசுகளும் ஏற்றுக்கொண்டு அரசின் பராமரிப்பில் உள்ள குழந்தைகளுக்காக அவசர கால முன்னெச்சரிக்கை மற்றும் பேரிடர் நிலைமைகளுக்கான நடவடிக்கைகளை செயல்படுத்த அனைத்து மாநிலங்களும் பின்வருவனற்றை செயல்படுத்த உத்தரவிடப்படுகிறது.<br><br>1. கோவிட்–19னை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த தகவல்கள் மற்றும் விழிப்புணர்வு குறித்த அறிவுறுத்தல்களை அனைத்து இல்ல குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களுக்கும் |

| | |
|---|---|
| | பயனுள்ளவாறு காலத்தே அனுப்பிவைக்க வேண்டும். |
| 2. Begin preparing for a disaster/emergency situation that may arise. Work with Persons in Charge of CCIs and District Child Protection Units to plan staffing rotations or schedules to reduce in-person interaction by CCI staff, where feasible. Begin developing a system for how to organise trained volunteers who could step in to care for children, when the need arises. | 2. அவசர கால/பேரிடர் நிலை ஏற்படின் அதற்கான முன் தயாரிப்புகளை துவங்க வேண்டும். குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் பணியாளர்களின் நேரடி தொடர்பினை குறைக்க இயன்றவரை சுழற்சி முறையில் பணியாற்றுவதற்கு நிறுவன பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுடனும் சேர்ந்து பணியாற்ற வேண்டும். தேவை எழும் சமயங்களில் குழந்தைகளை பராமரிக்க பயிற்சி பெற்ற தன்னார்வலர்களை எவ்வாறு அமர்த்தலாம் என்பதற்கான வழி முறையை உருவாக்க வேண்டும். |
| 3. Ensure that all government functionaries perform their duties diligently, and that strict action would be taken should there be any dereliction of duty. As per Rule 66 (1), Juvenile Justice Model Rules, 2016, any dereliction of duty, violation of rules and orders, shall be viewed seriously and strict disciplinary action shall be taken or recommended by the Person-in-charge against the erring officials. | 3. அரசின் செயல்பாட்டாளர்கள் அவர்களது கடமையினை அக்கறையுடன் செய்வதை உறுதி செய்யவேண்டும். மேலும், கடமை தவறும் நேர்வுகளில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். 2016–ன் மாதிரி விதிகள், விதி 66(1)ன்படி கடமை தவறுதல், விதிகளை மற்றும் உத்தரவுகளை மீறுதலை தீவிரமாக கருதி கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறிழைக்கும் நபர்கள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள நிறுவன பொறுப்பாளர்கள் பரிந்துரை செய்ய வேண்டும். |
| 4. Make provisions to ensure that counselling is made available, and that there are monitoring systems in place to prevent violence, abuse, and neglect, including gender-based violence, which may be exacerbated in contexts of stress produced by lockdown. | 4. ஆற்றுப்படுத்துநர் சேவை இருப்பதனை உறுதி செய்ய வழிவகை செய்யவேண்டும். ஊரடங்கில் ஏற்படும் மன அழுத்தத்தால் ஏற்படக்கூடிய வன்முறை, தீங்கிழைத்தல், புறக்கணித்தல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை ஆகியவற்றை தடுக்கக்கூடிய கண்காணிப்பு முறைகளை ஏற்படுத்தவேண்டும். |

| | |
|---|---|
| 5. Ensure adequate budgetary allocation is made to meet the costs that are likely to arise for the effective management of the pandemic, and that all bottlenecks and procedural delays are effectively curbed. | 5. நோய் தொற்றுகளை திறம்பட கையாள தேவைப்படும் செலவினத்திற்கான தேவையான நிதி ஒதுக்கீட்டை உறுதிபடுத்தவேண்டும். இதில் ஏற்படும் இடையூறுகள், காலதாமதங்களை திறம்பட தவிர்க்க வேண்டும். |
| 6. Ensure adequate availability of good quality face masks, soap, disinfectants such as bleach, or alcohol-based disinfectants, etc. | 6. தரமானமுககவசங்கள், சோப்பு, கிருமி நாசினிகளான பிளீச்சிங் பவுடர், ஆல்கஹால் கலந்த கிருமி நாசினிகள் போன்றவன தேவையான அளவு கிடைக்க உறுதி செய்தல். |
| 7. Ensure availability of adequate food, drinking water, and other necessities such as clean clothes, menstrual hygiene products, etc. | 7. தேவையான தரமான உணவு, குடிநீர் மற்றும் பிற அத்தியாவசிய தேவைகளான தூய்மையான துணிகள், மாதவிடாய் சுகாதார பொருள்கள் போன்றவன கிடைக்க உறுதி செய்யவேண்டும். |
| **7. DIRECTIONS TO CCIs**<br><br>The Person in Charge of the CCI and all other staff working in the CCI shall proactively and diligently take all necessary steps to keep the children safe from the risk of harm arising out of COVID-19, in furtherance of the fundamental principle of safety enshrined in the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015 (JJ Act, 2015).<br><br>1. The Health Ministry has set up **new National Helpline on COVID-19, which are 1075 and 1800-112-545**. In case of any queries or clarifications related to Coronavirus pandemic, call on this number. In addition, **Childline 1098** continues to be operational. | 7. **குழந்தை பராமரிப்பு நிறுவனங்களுக்கான ஆணைகள்:-**<br><br>கோவிட்–19 தொற்றினால் ஏற்படும் இடையூறிலிருந்து குழந்தைகளை பாதுகாக்க குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் பொறுப்பாளர்களும் நிறுவனத்தில் பணிபுரியும் ஏனைய பணியாளர்களும் இளைஞர் நீதிச் சட்டம் 2015ல் வகுத்துள்ள அடிப்படை கொள்கையான பாதுகாக்கும் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல தேவையான நடவடிக்கைகளை செய்திட வேண்டும்.<br><br>1. கோவிட்–19க்காக மத்திய சுகாதார அமைச்சகம் 1075 மற்றும் 1800–112–545 என்ற தேசிய அளவிலான உதவி எண்களை ஏற்படுத்தியுள்ளது. கொரானா நோய் தொற்று தொடர்பான சந்தேகங்கள் மற்றும் விளக்கங்களுகு இந்த எண்களை அழைக்கலாம். இவையன்றி சைல்டு லைன் 1098 தொடர்ந்து இயங்கி வருகிறது. |

| | |
|---|---|
| 2. In the case of staff or children with symptoms, call the helplines above mention and or a local doctor. Go to the hospital only if you receive such advise by doctor/helpline, or if symptoms are severe. | 2. பணியாளர்களுக்கோ, குழந்தைகளுக்கோ நோய் தொற்று குறித்து ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் மேலே உள்ள உதவி எண்களை அழைக்கலாம் அல்லது உள்ளூர் மருத்துவரை தொடர்பு கொள்ளலாம். மருத்துவரின் ஆலோசணையின்படியோ அல்லது அறிகுறிகள் தீவிரமாக இருந்தாலோ மருத்துவமனைக்கு செல்ல வேண்டும். |
| 3. Staff or any other individual found to be exhibiting symptoms of COVID-19 should not be permitted to enter the CCI. | 3. பணியாளரிடமோ அல்லது வேறு எந்த தனி நபரிடமோ அறிகுறிகள் தென்பட்டால் அவர்களை குழந்தை பராமரிப்பு நிறுவனத்தில் நுழைய அனுமதிக்கக்கூடாது. |
| 4. CCIs should promote social distancing. The Ministry of Health and Family Welfare, Government of India (MOHFW), has issued Guidelines on Social Distancing. | 4. குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் சமுதாய விலகலை பேணுதல் வேண்டும். சமூக விலகல் குறித்து இந்திய அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. |
| 5. CCIs should enforce regular hand washing with safe water and soap, alcohol rub/hand sanitizer or chlorine solution and, at a minimum, daily disinfection and cleaning of various surfaces including the kitchen and bathrooms. Where adequate water is not available, immediate steps should be taken to ensure it is made available through necessary action, including enhancing budget allocation for the said purpose. | 5. குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் பாதுகாப்பான தண்ணீருடன் சோப்பு கொண்டு கை கழுவுதல் ஆல்கஹால் கொண்ட கிருமி நீக்கி பயன்படுத்துதல் அல்லது குளோரின் கரைசலைக் கொண்டு கை கழுவுதலை கட்டாயம் கடைபிடிக்கவேண்டும். கிருமி நீக்கம் செய்தல், சமையறை குளியல் அறையில் உள்ள மேற்பரப்புகளை சுத்தம் செய்வது ஆகியவற்றை தினசரி வழக்கமாக செயல்படுத்த வேண்டும். தேவையான தண்ணீர் இல்லாதபோது உடனடியாக தண்ணீர் கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்துதல் போன்ற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். |

| | |
|---|---|
| 6. CCIs should provide appropriate water, sanitation, disinfection, and waste management facilities and follow environmental cleaning and decontamination procedures.<br><br>This information should be made available to families fostering children under foster or kindship care schemes. | 6. குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் குடிதண்ணீர், துப்புரவு, கிருமி நீக்கம், கழிவு மேலாண்மை போன்ற வசதிகளை ஏற்படுத்தவேண்டும் மேலும் சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் தூய்மைக்கான நடைமுறைகளை பின்பற்றவேண்டும்.<br><br>மேற்காணும் தகவல்களானது குழந்தைகள் மாற்று வளர்ப்பு பராமரிப்பு முறை மற்றும் உறவினர் பராமரிப்பில் உள்ள குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும், |
| **8. PREVENTIVE MEASURES FOR CCIs**<br>In order to prevent children and staff members in CCIs from getting infected by COVID - 19, Persons in Charge of CCIs shall:<br><br>**1. Know and make known how COVID -19 spreads**<br>The best way to prevent illness is to avoid being exposed to this virus. Current understanding on the virus is that it spreads mainly from person-to-person.<br><br>* Between a person who is infected with the virus and other people who are in close contact with that person;<br><br>* Having face-to-face contact with a COVID-19 patient within 2 meters and for >15 minutes;<br><br>* Through respiratory droplets produced when an infected person coughs or | **8.குழந்தை பராமரிப்பு நிறுவனங்களுக்கான தடுப்பு நடவடிக்கைகள்:-**<br>குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் பணியாளர்கள் கோவிட்–19 நோய் தொற்றினை தவிர்க்க நிறுவன பொறுப்பாளர்கள் பின் வரும் நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவேண்டும்.<br><br>1. **எவ்வாறு கோவிட்–19 நோய் பரவுகிறது என்பதை அறிதல்**<br>நோய் தொற்றிலிருந்து விலகி இருத்தலே காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு சிறந்த வழி ஆகும். இந்த வைரஸ் ஒரு ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு பரவுகிறது.<br><br>▪ வைரஸால் பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்ட நபர்களுக்கு பரவுகிறது.<br><br>▪ கோவிட் –19 நோயாளியின் முகத்திற்கு நேராக 2 மீட்டர் இடைவெளிக்குள் இருப்பது மற்றும் 15 நிமிடங்களுக்கு மேலாக தொடர்பில் இருப்பது.<br><br>▪ தொற்றுக்குள்ளான நபர் இருமும்போது அல்லது தும்மும்போது ஏற்படும் நீர்த்துளிகள் |

| | |
|---|---|
| sneezes. These droplets can land in the mouths or noses of people who are nearby or possibly be inhaled into the lungs; | மூலம் அருகாமையில் உள்ள நபர்களின் வாய் அல்லது மூக்குப்பகுதியில் படுதல் அல்லது அருகாமையில் இருப்பவர் அதனை சுவாசித்தலால் இந்நோய் பரவுகிறது. |
| * There is currently no vaccine to prevent COVID-19. | ▪ தற்போது கோவிட்–19க்கு தடுப்பு மருத்துகள் ஏதும் இல்லை. |
| **2. Take necessary steps to practice, promote and demonstrate positive hygiene behaviours and monitor their uptake** | **2. நேர்மறையான சுகாதார பழக்க வழுங்கங்களை செயல்படுத்தவும் ஊக்குவிக்கவும் செயல்விளக்கம் அளிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அதனை கண்காணித்தல்:-** |
| * Frequent usage of hand sanitizer by guard, gardener, driver, etc. present in the residential premises/compound. Ensure that hands are cleaned and disinfected often - Clean hands at the main door and schedule regular hand washing reminders; | * குடியிருப்பு வளாகத்தில் உள்ள காவலர், தோட்டப்பணியாளர், ஒட்டுநர் ஆகியோர் கைகளைத் தூய்மையாக வைத்திருக்க கிருமி நாசினியை அடிக்கடி பயன்படுத்தவேண்டும். கைகளை தொடர்ந்து சுத்தப்படுத்துவது, கிருமி நீக்கம் செய்வது பிரதான வாயில்களை சுத்தப்படுத்துவது, வழக்கமாக கைகளை கழுவும் நேரங்களை நினைவூட்டுதல் ஆகியவற்றை உறுதி செய்யவேண்டும். |
| * If possible, make arrangements hand sanitizers that contain at least 70% alcohol. Ensure that all surfaces of hands are covered, and they are rubbed together until they feel dry.The Person in Charge of the CCI should make necessary arrangements to utilize emergency/contingency funds | * குறைந்தபட்சம் 70% ஆல்கஹால் கொண்ட கை சுத்திகரிப்பான்களை ஏற்பாடு செய்யவேண்டும். மேலும், கைகள் முழுவதும் பரவும் வகையிலும் அது காய்ந்து போகும்வரையும் தேய்க்கவேண்டும். இல்லத்தின் பொறுப்பாளர் இந்த பயன்பாட்டுக்காக அவசர கால |

| | |
|---|---|
| for this purpose, and submit requisition for additional budgetary allocation where required, at the earliest. | நிதி/தற்காலிக நிதியினை பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். தேவைப்படின் கூடுதலான நிதி ஒதுக்கீட்டிற்கு முன்கூட்டியே கோரிக்கை சமர்ப்பிக்கவேண்டும். |
| **3. Practice social distancing**<br>* Physical distancing must be maintained.Shaking hands and hugging as a matter of greeting to be avoided. Instruct children and staff to maintain social distance by putting distance (at least 2 metres (6 feet) distance between yourself and anyone who is coughing orsneezing) between themselves and other people if COVID-19 is spreading in the community. This is especially important for people who are at higher risk of getting very sick, such as older; | **3. சமூக விலகளை நடைமுறைப்படுத்துதல்:-**<br>உடல் அளவில் இடைவெளியை பேண வேண்டும். வாழ்த்துவதற்காக கை குலுக்குதல் மற்றும் தழுவுதலை தவிர்க்கவேண்டும். குழந்தைகளுக்கும் பணியாளர்களுக்கும் சமூக இடைவெளியை கடைபிடிக்கவேண்டும். இருமும் அல்லது தும்முபவர்கள் அல்லது சமுதாயத்தில் கோவிட்–19னை பரப்புபவர்களிடமிருந்து குறைந்த பட்சம் 2 மீட்டர் (6 அடி) இடைவெளியை கடைப்பிடிக்கவேண்டும் என அறிவுறுத்தவேண்டும். குறிப்பாக விரைவில் தொற்றுக்கு ஆளாகக் கூடியவர்கள் அல்லது முதியவர்கள் இவற்றை கடைபிடிப்பது முக்கியமானதாகும். |
| * Reduce number of people entering into CCIs; | * குழந்தை பராமரிப்பு நிறுவனங்களுக்கு வரும் நபர்களின் எண்ணிக்கையை குறைக்கவேண்டும். |
| * Meetings shall be done through video conferences and/or rescheduled; | * கூட்டங்களை காணொலிக் காட்சி மூலம் நடத்துவது அல்லது வேறு நாட்களுக்கு தள்ளிப்போடவேண்டும். |
| * Distancing should be applying in the CCIs where children and staff members | * குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் குழந்தைகள் மற்றும் பணியாளர்கள் |

| | |
|---|---|
| congregate such as the reading, dining and television rooms. For example, use of these spaces can be scheduled at 25% participation and the schedule developed to ensure more social distancing. | ஒன்றுகூடும் இடங்களான வாசிக்கும் அறைகள், உணவருந்தும் அறைகள், தொலைக்காட்சி அறைகள் ஆகியவற்றில் சமூக இடைவெளியை கடைபிடிக்கவேண்டும். உதாரணமாக இவ்விடங்களில் 25% அளவில் சுழற்சி முறையில் அனுமதிக்கும் வகையில் அட்டவணையை தயாரித்து செயல்படுத்தவேண்டும். |
| **4. Cleaning and disinfecting rigorously**<br>Current evidence suggests that COVID-19 may remain viable for hours to days on surfaces made from a variety of materials. *Cleaning* refers to the removal of dirt and impurities, including germs, from surfaces. Cleaning alone does not kill germs. But by removing the germs, it decreases their number and therefore any risk of spreading infection. *Disinfecting* works by using chemicals to kill germs on surfaces. This process does not necessarily clean dirty surfaces or remove germs. But killing germs remaining on a surface after cleaning further reduces any risk of spreading infection. | **4. கிருமி நீக்கம் மற்றும் சுத்தப்படுத்துதலை தீவிரமாக்கல்:-**<br>தற்போதுள்ள சான்றுகளின்படி கோவிட்–19 ஆனது பல்வேறு வகையான பொருட்களின்மேல் சில மணி நேரம் முதல் நாட்கணக்கில் உயிருடன் இருக்கும். சுத்தப்படுத்துதல் என்பது மேற்பரப்புகளில் உள்ள அழுக்கையும், அசுத்தத்தினையும் கிருமிகளுடன் சேர்த்து நீக்குவது என்பது ஆகும். சுத்தப்படுத்துதல் மட்டும் கிருமிகளை கொல்லாது. ஆனால் கிருமிகளை நீக்குவதன் மூலம் அவற்றின் எண்ணிக்கையை குறைத்து தொற்றுப்பரவும் இடரைக் குறைக்கும். கிருமி நீக்கம் என்பது இரசாயணங்களை பயன்படுத்தி மேற்ப்பரப்புகளில் உள்ள கிருமிகளை அழிப்பதாகும். இந்த முறையானது அழுக்கடைந்த மேற் பரப்புகளை சுத்தப்படுத்துவதோ அல்லது கிருமி நீக்கம் செய்வதோ அல்ல. மேற்பரப்புகளை சுத்தப்படுத்தியதற்கு பின்பு அவற்றில் உள்ள |

| | |
|---|---|
| | கிருமிகளை அழித்து தொற்று மேலும் பரவாமல் குறைப்பதாகும். |
| * Clean and disinfect the CCI building, especially water and sanitation facilities at least once a day, and particularly surfaces that are touched by many people (railings, door and window handles, toys, teaching and learning aids etc.) Clean *and* disinfect frequently touched surfaces daily. This includes gates/doors, doorbells, tables, doorknobs, light switches, handles, desks, phones, toilets, water taps, wash basins, etc.; | * குழந்தை பராமரிப்பு கட்டிடங்களை தூய்மை செய்தல் மற்றும் கிருமி நீக்கம் செய்தல் குறிப்பாக பெரும்பாலான நபர்கள் தொடும் மேற் பரப்புகளை தண்ணீர் மற்றும் சுகாதார முறையில் தினமும் ஒருமுறையாவது சுத்திகரித்தல். (கைப்பிடி சுவர்கள், கதவுகள், ஜன்னல் கைப்பிடிகள், பொம்மைகள், கற்றல் உபகரணங்கள் போன்றவன) அடிக்கடி தொடக்கூடிய மேற்பரப்புகளை சுத்தப்படுத்துதல் (வாயிற்கதவுகள்,அழைப்பு மணிகள்,மேசைகள், கதவு கைப்பிடிகள், விளக்கு சுவிட்சுகள், கைப்பிடிகள், இருக்கைகள், கழிவறைகள், தண்ணீர் குழாய்கள், கை கழுவும் பேசின்கள் ஆகியன) |
| * Do not shake dirty laundry;this can minimize the possibility of dispersing virus through the air; | * அழுக்கான துணிகளை உதறக்கூடாது. இதனால் வைரஸானது காற்றில் பரவும் வாய்ப்பினை குறைக்க இயலும். |
| * Wash items using the hot water and dry items completely. Dirty laundry that has been in contact with an ill person can however be washed with other people's items if washed in hot water and with adequate amounts of soap/detergent; | * சூடான நீரைக் கொண்டு பொருட்களை சுத்தப்படுத்தி முழுமையாக காயவைத்தல் வேண்டும். தொற்றுள்ளவரின் அழுக்கடைந்த துணிகளை மற்றவர்களின் துணிகளுடன் துவைக்கும்போது வெந்நீரைக் கொண்டும் தேவையான அளவு சோப்பு/சலவைத்தூள் கொண்டு துவைக்கவேண்டும். |
| * Ensure adequate, clean toilets; | * போதுமான அளவு தூய்மையான கழிவறையாக இருக்கசெய்தல். |
| * Maintain clean and hygienic kitchen conditions; | * சுத்தமான சுகாதார முறையில் சமையலறையை பேணுதல். |

| | |
|---|---|
| * Cleaning/disinfecting all couriers packages, parcels, grocery packets before bringing inside the house and sanitizing hands right after the process. Preferably wear disposable gloves; | * கூரியர் பார்சல்கள், மளிகை பாக்கெட்டுகள் ஆகியவற்றை இல்லத்திற்கு கொண்டு வரும் முன்பு அவற்றை அனைத்தையும் சுத்தப்படுத்தி கிருமி நீக்கம் செய்யவேண்டும். அதற்கு பின்பு கைகளை நன்றாக கழுவ வேண்டும். முடிந்தவரை அழிக்கக்கூடிய கையுறைகளை பயன்படுத்தவேண்டும். |
| * For disinfection, diluted household bleach solutions, alcohol solutions with at least 70% alcohol,and most common household disinfectants should be used when possible. | * கிருமி நீக்கத்துக்கான வீட்டில் உபயோகப்படுத்தும் நீர்த்த பிளீச் கரைசல் குறைந்தது 70% ஆல்கஹால் உள்ளதாக இருத்தல் வேண்டும். மேலும் வீடுகளில் பொதுவாக பயன்படுத்தும் கிருமி நாசினிகளை கூடுமானவரை பயன்படுத்தவேண்டும். |
| **9. RESPONSIVE MEASURES FOR CCIs** | **9. குழந்தை பராமரிப்பு நிறுவனங்களுக்கான பொறுப்பு நடவடிக்கைகள்:-** |
| 1. **Conduct regular screening:** Symptoms can include fever, cough and shortness of breath. In more severe cases, infection can cause pneumonia or breathing difficulties. These symptoms are similar to the flu (influenza) or the common cold, which are a lot more common than COVID-19. This is why testing is required to confirm if someone has COVID-19. | 1. **வழக்கமான பரிசோதனை நடத்தவும்:** அறிகுறிகளில் காய்ச்சல், இருமல் மற்றும் மூச்சுத் திணறல் ஆகியவை அடங்கும். மிகவும் கடுமையான சந்தர்ப்பங்களில் தொற்று நிமோனியா அல்லது சுவாச சிரமங்களை ஏற்படுத்தும். இந்த அறிகுறிகள் காய்ச்சல் (இன்ஃப்ளுயன்ஸா) அல்லது ஜலதோஷம் போன்றவை அவை கோவிட்–19 ஐ விட மிகவும் பொதுவானவை. இதனால் தான் ஒருவரிடம் கோவிட்–19 இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த சோதனை தேவைப்படுகிறது. |
| 2. **Health referral system to be followed:** The CCI should immediately follow procedures established by the Ministry/Department of Health and Family Welfare, if children or staff or other service providers working in the CCI become unwell. First step is to | 2) **பின்பற்ற வேண்டிய சுகாதார பரிந்துரை முறை:-** குழந்தைகள் அல்லது பணியாளர்கள் அல்லது குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் பணிபுரியும் பிற சேவை வழங்குவோர் உடல்நிலை சரியில்லாமல் போனால், குழந்தை பராபரிப்பு நிறுவனமானது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தால் |

| | |
|---|---|
| inform the nurse/doctor attached to the CCI at the earliest, when there is a suspicion of COVID-19 infection in any staff/child. CCIs can call the helplines referred above or a local doctor. Children or people affected should go only if such advise is given by doctor/helpline, or if symptoms are severe. | நிறுவப்பட்ட நடைமுறைகளை உடனயாக பின்பற்ற வேண்டும். எந்தவொரு பணியாளர்/குழந்தையிடமும் கோவிட்–19 நோய்த் தொற்று இருப்பதாக சந்தேகம் இருக்கும்போது, குழந்தை பராமரிப்பு நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட செவிலியர்/மருத்துவரிடம் விரைவில் தெரிவிக்க வேண்டும். மேலும், குறிப்பிட்டுள்ள உதவி எண்களை அல்லது உள்ளூர் மருத்துவரை அழைக்கலாம். அறிகுறிகள் கடுமையாக இருந்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவனைக்கு செல்ல வேண்டும். |
| 3. **Quarantine:** In case of symptoms, the children the CCI should have a quarantine/segregated section (*where possible*) & make alternate arrangements where a quarantine facility is not possible. | 3) **தனிமைப்படுத்துதல்:-** அறிகுறிகள் இருந்தால் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட /பிரிக்கப்பட்ட பகுதியைக் கொண்டு (சாத்தியமான இடங்களில்) இருக்கவேண்டும். தனிமைப்படுத்த வசதி சாத்தியமில்லாத இடத்தில் மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். |
| 4. **Planning in advance for emergency situations.** The Person in Charge of the CCI shall, in coordination with the health staff attached to the CCI, - plan ahead with the local health authorities to plan for any emergency that may arise due to the COVID-19. This shall include: | 4) **அவசர கால சூழ்நிலைகளுக்கு முன்கூட்டியே திட்டமிடுதல்:-** குழந்தை பராமரிப்பு நிறுவனத்தினர் பொறுப்பாளர் குழந்தை பராமரிப்பு நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ள சுகாதார ஊழியர்களுடன் ஒருங்கிணைந்து, உள்ளூர் சுகாதார அதிகாரிகளுடன் கோவிட்–19 காரணமாக ஏற்படக்கூடிய எந்தவொரு அவசரநிலையையும் திட்டமிட வேண்டும் இதில் பின்வருவன அடங்கும். |
| * updating the emergency contact lists; | * **அவசர தொடர்பு பட்டியல்களை புதுப்பித்தல்.** |

| | |
|---|---|
| * separating sick children and staff from those who are well, without creating stigma; | * நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் மற்றும் ஊழியர்களை களங்கத்தை உருவாக்காமல் நன்றாக இருப்பர்களிடமிருந்து பிரித்தல். |
| * for informing parents/caregivers, and consulting with health care providers/health authorities wherever possible; and | * பெற்றோர்கள் பராமரிப்பாளர்களுக்கு தெரிவிப்பதுடன் சுகாதார அதிகாரிகளுடன் முடிந்தவரை ஆலோசனை பெறுதல் வேண்டும். |
| * whether or not children/staff need to be referred directly to a health facility, depending on the situation/context, or sent home, after obtaining the necessary orders from the concerned Child Welfare Committee or Juvenile Justice Board, or Children's Court. | * சம்பந்தப்பட்ட குழந்தைகள் நலக் குழு அல்லது இளைஞர் நீதி குழுமம் அல்லது குழந்தைகள் நீதிமன்றத்தில் இருந்து தேவையான உத்தரவுகளை பெற்ற பின்னர் சூழலைப் பொறுத்து குழந்தைகளை வீட்டுக்கு அல்லது நேரடியாக ஒரு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படவேண்டுமா இல்லையா என முடிவு செய்தல் வேண்டும். |
| * Information about such procedures shall be shared with staff, parents and children ahead of time. | * இது போன்ற நடைமுறைகள் பற்றிய தகவல்களை பணியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு முன்னதாகவே உரிய நேரத்திற்குள் பகிரப்படவேண்டும். |
| **10. MEASURES FOR CHILDREN UNDER FOSTER AND KINDSHIP CARE** | **10. மாற்று குடும்ப பராமரிப்பு மற்றும் உறவினர் மூலம் வளர்ப்பு முறையின் கீழ் குழந்தைகளுக்கான நடவடிக்கைகள்:-** |
| * Families that are fostering children should receive information about how to prevent COVID-19 as indicated above. | * குழந்தைகளை வளர்க்கும் குடும்பங்கள் மேலே குறிப்பிட்டுள்ளபடி கோவிட்–19 ஐ எவ்வாறு தடுப்பது என்பது பற்றிய தகவல்களை பெறுதல் வேண்டும். |
| * Follow up should be made on their health and psychosocial well-being status, and they should be informed of how to do in case of symptoms | * அவர்களின் உடல்நலம் மற்றும் உளவியல் நல்வாழ்வு நிலை குறித்து பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். மேலும் அறிகுறிகள் ஏற்பட்டால் அவற்றை எப்படி கையாள்வது என்பது குறித்து அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். |

| | |
|---|---|
| **11. GUIDANCE ON MEASURES TO ENSURE WELLBEING OF CHILDREN (CNCP and CiCWL)** | **11. குழந்தைகளின் நல்வாழ்வை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்த வழிகாட்டுதல் (பராமரிப்பும், பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணான குழந்தைகள்):-** |
| * **It is important to acknowledge that for children, it is natural to feel stress, anxiety, grief, and worry during an ongoing pandemic like COVID-19 disease.** They may express psychological distress (anxiety, sadness) by acting out in a different way- each child behaves differently. Some may become silent while other may feel and express anger and hyperactivity. | * நடப்பில் உள்ள கோவிட்–19 நோய் போன்ற ஒரு தொற்று நோய்காலத்தில் குழந்தைகள் மன அழுத்தம், பதட்டம், வருத்தம் மற்றும் கவலை ஆகியவற்றை உணர்வது இயற்கையானது என்பதை ஒப்புக்கொள்வது அவசியம். அவர்கள் வித்தியாசமான முறையில் செயல்படுவதன் மூலம் அவர்களின் மன உளைச்சலை (கவலை, சோகம்) வெளிப்படுத்தலாம். ஒவ்வொரு குழந்தையும் வித்தியாசமாக நடந்து கொள்கின்றன. சிலர் அமைதியாக இருக்கலாம் மற்றவர்கள் கோபத்தையும் அதிவேகத் தன்மைமையையும் உணரலாம் மற்றும் வெளிப்படுத்தலாம். |
| * **Reassure the children that they are safe. Let them know it is okay if they feel upset.** Share with them how you deal with your own stress so that they can learn how to cope from you. Caregivers need to validate these emotions and talk to children calmly about what is happening in a way that they can understand. Keep it simple and appropriate for each child's age. Give children opportunities to talk about what they are feeling. Anxiety and stress is also borne out of lack of knowledge, rumours and misinformation. Provide right kind of information from trusted sources an honest, age-appropriate manner. Take time to talk with the children and to share the facts about COVID-19, - enabling them to | * அவர்கள் பாதுகாப்பாக இருப்பதாக குழந்தைகளுக்கு உறுதியளிக்கவும் அவர்கள் வருத்தப்பட்டால் பரவாயில்லை என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்கள் சொந்த மன அழுத்தத்தை நீங்கள் எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள் என்பதை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள், இதன்மூலம் சூழலை எவ்வாறு சமாளிப்பது என்பதை உங்களிடமிந்து அவர்கள் கற்றுக்கொள்ள முடியும். பராமரிப்பு வழங்குபவர்கள் இந்த உணர்ச்சிகளை சரிபார்த்து, புரிந்துகொள்ளக்கூடிய வகையில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி குழந்தைகளுடன் அமைதியாகப் பேச வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் வயதுக்கு ஏற்றவாறு எளிமையாக புரிய வைக்கவும். குழந்தைகளுக்கு அவர்கள் என்ன உணர்கிறார்கள் என்பதைப் பற்றி பேச வாய்ப்பளிக்கவும். நோய் பற்றிய அறியாமை |

| | |
|---|---|
| understand the actual risk can make an outbreak less stressful. | வதந்திகள் மற்றும் தவறான தகவல்களால் கவலை மற்றும் மன அழுத்தம் ஏற்படுகிறது. நம்பகமான ஆதாரங்களிலிருந்து சரியான தகவல்களை நேர்மையாகவும் வயதுக்கு ஏற்ற வகையில் வழங்கவேண்டும் குழந்தைகளுடன் பேசவும், கோவிட்–19 பற்றிய உண்மைகளைப் பகிர்ந்து கொள்ளவும் நேரம் ஒதுக்குங்கள். உண்மையான அபாயத்தைப் புரிந்துக்கொள்ள அவர்களுக்கு உதவுவது குறைந்த மன அழுத்தத்தையே ஏற்படுத்தும். |
| * **Encourage children to connect with each other and to talk with people they trust, about their concerns and how they are feeling.** | * ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதற்கும், அவர்கள் நம்பும் நபர்களுடன் பேசுவதற்கும், அவர்களின் கவலைகள் மற்றும் அவர்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதையும் தெரிவிக்க குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும். |
| * **Avoid watching, reading, listening or discussing too much news about the COVID-19 and persuade children to divert their attention to other topics as well.** Children may misinterpret what they hear and can be frightened about something they do not understand. Hearing about the pandemic repeatedly can be upsetting. | * கோவிட்–19 பற்றிய அதிகமான செய்திகளைப் பார்ப்பது, படிப்பது, கேட்பது அல்லது விவாதிப்பதைத் தவிர்க்கவும், மற்ற விசயங்களில் அவர்களின் கவனத்தைத் திசைத்திருப்பவும் குழந்தைகளை வற்புறுத்துங்கள். அக்குழந்தைகள் கேட்பதை தவறாகப் புரிந்துக்கொள்ளலாம் மற்றும் அவர்களுக்குப் புரியாத ஒன்றைப் பற்றி பயப்படக்கூடும் தொற்றுநோயைப் பற்றி மீண்டும் மீண்டும் கேட்பது வருத்தமளிக்கும். |
| * Disruption of routine and closure of schools may be stressful for children. **Try to continue with the regular routine maintained in the home, with minimal disruptions**, so as to maintain a sense of security and wellbeing, while taking all measures to ensure the safety of the children and the staff. | * வழக்கமான பணிகளில் இடையூறு மற்றும் பள்ளிகளை மூடுவது குழந்தைகளுக்கு மன அழுத்தமாக இருக்கலாம் குழந்தைகள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்போது பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வைப் பராமரிக்கும் வகையில், குறைந்த இடையூறுகளுடன் வீட்டில் பராமரிக்கப்படும் வழக்கமான வழக்கத்தைத் தொடர முயற்சிக்கவும். |

| | |
|---|---|
| * **Spend time with children and help them to unwind, preferably doing activities they enjoy.** Make it a point to have interactive activities, games etc. with children to keep them engaged in a positive way. Make sure children have enough opportunity to move around, run and do physical activities, even if they are not going to school or playing with friends outside. If schools are going to be closed for a period of time, talk to teachers to put up a list of interactive child-centric activities to keep children engaged. | * குழந்தைகளுடன் நேரத்தை செலவிடுங்கள், அவர்களை விடுவிக்க உதவுங்கள், முன்னுரிமை அடிப்படையில் அவர்கள் அனுபவிக்கும் செயல்களைச் செய்ய அனுமதியுங்கள். ஊடாடும் செயல்பாடுகள், விளையாட்டுகள் போன்றவற்றைக் கொண்டிருப்பதை ஒரு அம்சமாக மாற்றுங்கள். குழந்தைகளுடன் அவர்களை நேர்மறையான வழியில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாவிட்டாலும் அல்லது வெளியில் உள்ள நண்பர்களுடன் விளையாடாவிட்டாலும்கூட, குழந்தைகளுக்கு உலாவவும், ஓடவும், உடல் பயிற்சிகளைச் செய்யவும் போதுமான வாய்ப்பு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பள்ளிகள் மூடப்போகிறார்கள் என்றால் குழந்தைகளை எப்போதும் ஈடுபாடுடன் வைக்க குழந்தைகளை மையாகக் கொண்ட செயல்பாடுகளின் பட்டியலை தயாரிக்க ஆசிரியர்களிடம் கலந்துரையாடி தயார்படுத்துங்கள். |
| * **It is important to consider that violence, including sexual and gender-based violence may be exacerbated in contexts of anxiety and stress produced by lockdown and fear of the disease. Do not use corporal punishment /violence to discipline children**. This will add to their anxiety and stress and may have serious mental health implication. All CCI staff need to be cognizant of the fact that there is an increased risk of violence (by peers, other staff members) including sexual abuse. Ensure prevention of all forms of violence. | * ஊரடங்கு மற்றும் நோயின் பயம் ஆகியவற்றால் உருவாகும் கவலை மற்றும் மன அழுத்தத்தின் சூழல்களில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையலான வன்முறை உள்ளிட்ட வன்கொடுமைகள் அதிகரிக்கக்கூடும் என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம். குழந்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கு உடல் ரீதிதின தண்டனை/வன்முறையை பயன்படுத்த வேண்டாம். இது அவர்களின் கவலை மற்றும் மன அழுத்தத்தை மேலும் அதிகரிக்கும் மற்றும் கடுமையான மன நல தாக்கத்தை கொண்டிருக்கக்கூடும். பாலியல் துஷ்பிரயோகம் உட்பட வன்முறை (சகாக்கள், பிற ஊழியர்களால்) அதிக ஆபத்து உள்ளது என்பதை அனைத்து குழந்தை பராமரிப்பு |

| | |
|---|---|
| | நிறுவன ஊழியர்களும் அறிந்திருக்க வேண்டும். அனைத்து வகையான வன்முறைகளையும் தடுப்பதை உறுதி செய்யுங்கள். |
| * **Guide students on how to support their peers and prevent exclusion and bullying.** | * மாணவர்களிடையே அவர்களின் சகாக்களுக்கு எவ்வாறு உதவுவது என்பதையும் மற்றும் அவர்களை விலக்கி வைத்தல் மற்றம் கொடுமைப்படுத்துதலை தடுப்பது குறித்தும் வழிகாட்ட வேண்டும். |
| * **Work with the health staff/social workers/counsellors to identify and support children and staff who exhibit signs of distress in the CCI.** In CCIs, there may be some children who are undergoing some kind of counselling or treatment for pre-existing mental health issues. Ensure continuance of the treatment/therapy in consultation with the therapist/psychiatrist. | * குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் மன அழுத்தத்தின் அறிகுறிகளை வெளிப்படுத்தும் குழந்தைகள் மற்றும் ஊழியர்களை அடையாளம் கண்டு ஆதரிக்க சுகாதார பணியாளர்கள்/சமூக சேவையாளர்கள்/ஆலோசகர்கள் ஆகியோருடன் இணைந்து பணியாற்றுங்கள். குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் ஏற்கனவே மன நல பிரச்சனைக்கு சிகிச்சையின் சில வகையான ஆலோசனைகளை மேற்கொள்ளும் சில குழந்தைகள் இருக்கலாம். அவர்களுக்கு சிகிச்சையாளர் / மனநலமருத்துவருடன் கலந்தாலோசித்து சிகிச்சையின் தொடர்ச்சியை உறுதிசெய்யவேண்டும். |
| * **Ensure that no staff or child is subject to any form of stigmatizing words or behaviour arising due to coughing, sneezing**, etc., as this violates the principles of 'equality and non-discrimination,' 'dignity and worth' | * இருமல், தும்மல் போன்றவற்றால் எழும் எந்தவொரு அவச்சொற்களுக்கும் எந்த ஒரு ஊழியரும் குழந்தையும் உட்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். ஏனெனில் இது சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை, கண்ணியம் மற்றும் தன்மதிப்பு ஆகிய கொள்கைகளை மீறுகிறது. |
| * **Encourage and support children to take care of their bodies**- taking deep breaths, stretching, doing yoga/meditation, eating healthy, well-balanced meals, exercising regularly, getting lenty of sleep, etc. | * ஆழ்ந்த சுவாசம், உடல்நீட்சி பயிற்சிகள், யோகா/தியானம், ஆரோக்கியமான சீரான உணவை உட்கொள்வது, தவறாமல் உடற்பயிற்சி செய்வது, தாராளமான அளவு தூங்குவது போன்றவற்றை குழந்தைகளின் உடலை கவனித்துக்கொள்ள ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும். |

| | |
|---|---|
| * **Work with social service systems to ensure continuity of critical services that may take place in CCIs,** such as health screenings, or therapies for children with special needs. Consider the specific needs of children with disabilities, and how marginalized populations may be more acutely impacted by the illness or its secondary effects. | * உடல் நல பரிசோதனைகள் அல்லது குறைபாடுகள் உள்ள சிறப்பு தேவைகளை கொண்ட குழந்தைகளுக்கான சிகிச்சைகள் போன்ற குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் நிகழக்கூடிய முக்கியமான சேவைகளின் தொடர்ச்சியை உறுதிசெய்யவேண்டும். மேலும் விளிம்பு நிலை மக்கள் நோயால் எவ்வாறு தீவிரமாக பாதிக்கப்படலாம் அல்லது நோயின் இரண்டாம் விளைவுகளால் எவ்வாறு பாதிப்படையலாம் என்பதற்கும் சமூக சேவை அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றவேண்டும். |